## செப்டம்பர்– 01 – வெள்ளி

### முதல் வாசகம்: 1 தெசலோனி 4 : 1 – 8

சகோதர சகோதரிகளே! நீங்கள் கடவுளுக்கு உகந்தவர்களாய் வாழும் முறையை எங்களிடம் கற்றுக் கொண்டீர்கள் அப்படியே வாழ்ந்தும் வருகிறீர்கள். இதில் இன்னும் முன்னேற வேண்டுமென ஆண்டவராகிய இயேசுவின் பெயரால் உங்களிடம் இறுதியாகக் கேட்டுக் கொள்கிறோம். ஆண்டவராகிய இயேசுவின் பெயரால் நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை நீங்கள் அறிவீர்கள்.நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம் பரத்தைமையை நீங்கள் தவிர்க்க வேண்டும்.உங்களில் ஒவ்வொருவரும் தம் மனைவியைத் தூயவராகக் கருதி, மதிப்புடன் நடத்த அறிந்திருக்க வேண்டும்.கடவுளை அறியாத பிற இனத்தாரைப் போன்று நீங்கள் கட்டுக்கடங்காப் பாலுணர்வுக்கு இடம் கொடுக்கலாகாது.இதில் எவரும் தவறிழைத்துத் தம் சகோதரரை வஞ்சிக்கக் கூடாது. ஏனெனில் இத்தகைய செயல்கள் அனைத்தையும் ஆண்டவரே தண்டிப்பார். இதை நாங்கள் முன்னமே உங்களிடம் எடுத்துரைத்திருக்கிறோம் எச்சரித்தும் இருக்கிறோம்.கடவுள் நம்மை ஒழுக்கக்கேட்டிற்கு அல்ல, தூய வாழ்வுக்கே அழைத்தார். எனவே இக்கட்டளைகளைப் புறக்கணிப்போர், மனிதரை அல்ல, தம்முடைய தூய ஆவியை உங்களுக்கும் அளிக்கும் கடவுளையே புறக்கணிக்கின்றனர்.

**பதில்பாடல் :** நேர்மையாளர்களே ஆண்டவரில் களி கூருங்கள்

### நற்செய்தி : மத்தேயு 25 : 1 – 13

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது: ”அந்நாளில் விண்ணரசு எவ்வாறு இருக்கும் என்பதைப் பின்வரும் நிகழ்ச்சி வாயிலாக விளக்கலாம் மணமகனை எதிர்கொள்ள மணமகளின் தோழியர் பத்துப்பேர் தங்கள் விளக்குகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களுள் ஐந்து பேர் அறிவிலிகள் ஐந்து பேர் முன்மதி உடையவர்கள்.அறிவிலிகள் ஐவரும் தங்கள் விளக்குகளை எடுத்துச் சென்றார்கள் ஆனால் தங்களோடு எண்ணெய் எடுத்துச் செல்லவில்லை. முன்மதியுடையோர் தங்கள் விளக்குகளுடன் கலங்களில் எண்ணெயும் எடுத்துச் சென்றனர்.மணமகன் வரக் காலந் தாழ்த்தவே அனைவரும் தூக்க மயக்கத்தால் உறங்கிவிட்டனர். நள்ளிரவில், ”இதோ மணமகன் வருகிறார். அவரை எதிர்கொள்ள வாருங்கள்” என்ற உரத்த குரல் ஒலித்தது.மணமகளின் தோழியர் எல்லாரும் எழுந்து தங்கள் விளக்குகளை ஒழுங்குபடுத்தினர். அப்போது அறிவிலிகள் முன்மதியுடையோரைப் பார்த்து, ”எங்கள் விளக்குகள் அணைந்துகொண்டிருக்கின்றன் உங்கள் எண்ணெயில் எங்களுக்கும் கொடுங்கள்” என்றார்கள்.முன்மதி உடையவர்கள் மறுமொழியாக, ”உங்களுக்கும் எங்களுக்கும் எண்ணெய் போதுமான அளவு இராமல் போகலாம். எனவே வணிகரிடம் போய் நீங்களே வாங்கிக்கொள்வதுதான் நல்லது” என்றார்கள்.அவர்களும் வாங்கப் புறப்பட்டுச் சென்றார்கள். அப்போது மணமகன் வந்து விட்டார். ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடு திருமண மண்டபத்துக்குள் புகுந்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது.பிறகு மற்றத் தோழிகளும் வந்து, ”ஐயா, ஐயா, எங்களுக்குக் கதவைத் திறந்துவிடும்” என்றார்கள்.”அவர் மறுமொழியாக, ”உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் எனக்கு உங்களைத் தெரியாது ”என்றார்.எனவே விழிப்பாயிருங்கள் ஏனெனில் அவர் வரும் நாளோ வேளையோ உங்களுக்குத் தெரியாது” என்றார்

**தியானம்:** இன்று செப்டம்பர் மாத முதல் நாள். கடந்த எட்டாம் மாதத்தின் இறுதிநாள் வரை எம்மைத் தமது பராமரிப்பில் லைத்துப் பாதுகாத்து வழிநடாத்திய எல்லாம் வல்ல இறைவனுக்கு முதலில் நன்றி கூறுவோம். எமது மனிதப்பெலவீனத்தால் அடிக்கடி பாவத்தில் விழும் நாம், ஆண்டவர் இயேசுவின் மறுவருகையை எதிர்நோக்கி வாழ்வது இலேசான காரியமல்ல என்பது உண்மை. ஆதலால், நாம் எப்போதும் இறை ஞானத்தால் திடமான விசுவாசம் உடைய கிறிஸ்தவர்களாக எம்மை மாற்றி அமைக்கவேண்டும். அப்படியாயின், இறைமகன் இயேசுவின் மறு வருகைக்காக எவ்வாறு வாழ வேண்டும்? அது இலேசான காரியமற்றதே என நாம் வியக்கலாம். எனினும், எமது ஏனைய காரியங்களில் (படிப்பில், பணம் சேர்ப்பதில், விளையாட்டில், தொழில் நுட்பங்களைக் கற்பதில்) எவ்வாறு ஆர்வம் காட்டி நம்பிக்கை வைக்கின்றோமா, அதிலும் மேலானதாக தம்மிலே நம்பிக்கை வைத்து எவ்வேளையிலும் தயாராக இருக்குமாறு ஆண்டவர் இயேசு எம்மிடம் எதிர்பார்க்கின்றார் என்பதே இன்றைய நற்செய்தியாகும். எனவே, இறைமகன் இயேசு மீண்டும் வரும்போது நாம் அறிவிலிகளான கன்னியரைப் போல் இருப்போமா? அல்லது முன்மதி உடைய கன்னியர் போன்று (போதிய வாஞ்சையோடு) தயாராக இருப்போமா? ஆண்டவர் இயேசு எவ்வேளையில் எம்மண்டை வந்தாலும் நாம் மங்காத விளக்குகளாகக் காவலிருக்கவேண்டும். ஏனெனில் இவ்வுலகின் மாயக்கவர்ச்சிகள், எமது பெலவீனங்கள் எம்மை பாவத்தில் விழுத்துகின்றன. இறைசித்தம், இறை செயல் எது? என்று புரிந்து கொள்ளமுடியாத அளவிற்கு எமது சுயபுத்தியே மங்கிப்போய் நாம் வாழுகின்றோம். இப்படியான பெலவீனங்களுக்கு நாம் அடிமையாகாது எப்போதும் விழிப்பாக இருக்குமாறு இறைமகன் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். ஏனெனில், நாம் விழிப்பாக இருக்கவேண்டியது இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாவது வருகைக்காக மட்டுமல்ல. மாறாக, எமது நாளாந்த வாழ்வில் அவர் எம்மை நெருங்கி வரமுயலும் போதெல்லாம் அவரை நாம் அடையாளம் கண்டு ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். நாம் தயாரா?